செ.வெ.எண்.46 நாள்.17.11.2017.

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித்திறனை மேம்படுத்தவும் அவர்களின் வருவாயினை பெருக்கிட ஏதுவாகவும் உள்நாட்டு மீனவர்களுக்கு 50% மானியத்தில் மீன்பிடி வலைகள் மற்றும் கண்ணாடி நாரிழையிலான பரிசல்கள் வழங்கும் திட்டம் 2017-18 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் மாண்புமிகு மீன்வளத்துறை, பணியாளர் நலம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விதிமுறைகளுக்குட்பட்டு 50% மானியத்தில் மீன்பிடி வலைகள் மற்றும் கண்ணாடி நாரிழை பரிசல்கள் பெற விருப்பமுள்ள தகுதியான உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் துறை நீர்த்தேக்கங்களில் பங்கு மீன்பிடிப்பு மேற்கொள்ளும் பங்கு மீனவர்கள் திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலியில் கீழ்க்கண்ட முகவரியில் இயங்கி வரும் அலுவலகத்தில் நேரில் சென்று விண்ணப்பம் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்களின் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மீன்துறை உதவி இயக்குநர்,
42 C , 26-வது தெரு ,
மகாராஜ நகர்,
திருநெல்வேலி-11.
தொலைபேசி எண்:0462-2581488.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.